www.padippakam.com

# எரிமலை

மலை—1

குமுறல்—2

30 ஏப்ரல் 1986



www.padippkam.com

# எரிமலையின் எண்ணங்களில்

இலங்கைப் பொருளாதாரத்தின் முது கெலும்பு மலையக மக்களே!

பிரித்தானிய காலனித்துவ வாதிகளால் 150 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாட்டிலிருந்து கங்காணிகள் மூலம் கொண்டுச் செல்லப்பட்டவர்கள், இன்று **மலையக தோட்டத் தொழிலாளர்கள்** என்று அழைக்கப்படுகின்றார்கள்.

தேயிலை உற்பத்தியின் ஊடாக இலங்கையின் தேசிய வருமானத்தில் பெரும்பங்கை ஈட்டித் தந்துவரும் பாட்டாளிகள் மலையக மக்களே' சிறிலங்காவின் தேசிய பொருளாதாரத்தில் இவர்கள் முதுகெலும்பாக இருந்த போதிலும் இவர்களது வாழ்க்கையில் எந்த விதமான சுபிட்சமும் அற்ற நிலையில் தான் இன்று வரை வாழ்ந்து வருகின்றார்கள்.

வெள்ளையர்களினால் அடக்கி ஒடுக்கப் பட்டுகூலி அடிமைகளாக நடத்தப்பட்டு வந்த இந்த மக்கள் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் தமது வாழ்வில் விடிவு ஏறபடும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களது எதிர்பார்ப்பிற்கு மாறாக முடிவுகள் நடந்தேறுன.

1948ம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த போது அதன் முதலாவது ஆட்சியினராக ஐக்கிய தேசிய கட்சியினர் அதிகாரத்திற்கு வந்தனர். அப்பொழுது நடைபெற்ற பொதுத்தேர்தலில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் முற்போக்கு சக்திகளை ஆதரித்து தங்களது வாக்குகளை அளித்தனர். இதன் மூலம் இடது சாரி வேட்பாளர்கள் பலர் வெற்றி அடைந்தனர்.

இந்த வெற்றி முதலாளித்துவ கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்குப் பெரும் ஆத்திரத்தை மூட்டியது எதிர்காலத்தில் சிறிலங்காவில் இடது சாரிகளின் கை நிலைத்து விடுமோ என்ற ஐய்யப் பாட்டினால் இதன் வளர்ச்சியை ஆரம்பத்திலேயே கிள்ளி எரிய ஆரம்பித்த இக்கட்சியினர் மலையக மக்களின் குடியுரிமையில் கை வைத்தனர் இந்த அநீதியை எதிர்த்து பெரும் குரல் எழுப்பப்பட்ட போதிலும் பறிக்கப்பட்ட உரிமையை திரும்பப் பெறமுடியவில்லை.

இதன் பின் அதிகாரத்திற்கு வந்த சிறிலங்கா சுதந்திர கட்சி 1964 ஆம் ஆண்டு சிரிமா சாஸ்த்திரி ஒப்பந்தத்தை உருவாக்கினர். மலையக மக்களது அபிலாசைகள் என்ன வென்று அறிந்து கொள்ளாமல் அவர்களை சந்தைப் பொருளாக எண்ணி ஒப்பந்தத்தை உருவாக்கியமை உலகம் அறிந்த ஒன்றாகும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் மலையக மக்கள் சமூகத்தின் கோப்பு சிதறடிக்கப்பட்டது. இன்று மலயகத்தில் 20 லட்சமாக இருக்க வேண்டிய மக்கள் தொகை 10 லட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. மறுபுறம் இவர்களுக்கெதிராக சிங்கள இன வெறியர்களினால் தொடுக்கப்படும் தாக்குதல்களின் போதெல்லாம்,உறுதியோடு நின்று போராடுவதற்குப் பதிலாக ஊசலாட்டமனோ நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் தமிழகத்துக்கு வந்து குடியேறி விடுவதா! அல்லது இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளுக்குப் போய் குடியேறி விடுவதாயென திக்கு திசை தெரியாமல் தத்தளிக்கின்றனர், மலையக மக்கள் மத்தியில் ஒரு உறுதியான மனோ நிலையை உறுவாக்குவது ஒரு அவசியத் தேவையாகியுள்ளது. இதை எவ்வாறு செய்வது நடைமுறைப் படுத்துவது என்பது அனைவரின் ஆலோசனைக் குறியதொன்றாகும்.

ஈழம் கோரும் அமைப்புகள் தங்களது கோரிக்கையை வென்றெடுக்க ஆயுதமேந்திய போராட்டத்தை நடத்தி வருகின்றன. ஆனால் மலையக மக்கள் மத்தியில் ஈழம் பற்றிய கருத்தும் அதற்கான போராட்டமும் இன்னும் போதியளவுக்கு வலுவடையவில்லை குறைந்த பட்சம் அவர்கள் தமது அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காகக்கூட இன்னும் தீவிரமான போராட்டங்கள் பரந்தளவில் நடைபெறவில்லை. இந்நிலையில் தமிழ் இனம் என்ற அடிப்படையில் அவர்கள் மீது அடக்கு முறை

www.padippkam.com

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1



கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இராணுவ பொலிஸ் தாக்குதல்கள் கண் மூடித்தனமான முறையில் மேற்கொள்ளப் படுகின்றன. காரணங்களில்லாமலே இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள் ஆசிரியர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றார்கள். அரசின் இவ்வாரான இன அடக்கு முறைக்கெதிராக போராடுவதற்கு தன்னிச்சையாகவே தள்ளப் படுவதற்கான புற நிலமைகள் இன்றைய மலையகத்தில் உருவாகி வருகின்றன. மலையகத்தில் கிளர்ந்து வரும் புதிய எழுச்சியை முளையிலேயே கிள்ளி விடுவதென்று தீர்மானித்த செயவர்த்தனா அரசு மலையக இளைஞர்களையும் மாணவர்களையும் கைது செய்ய தொடங்கிய வேலையில் ஒடுக்கு முறைக்கு அஞ்சாமல் மலையக மக்கள் தொழிற்சங்க ரீதியாக தங்கள் பிள்ளைகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் அது பயனற்றுப் போயிற்று

சிறிமா அம்மையாருக்கு சிவில் உரிமை வழங்கப்பட்டதுவும். பாராளுமன்றததில் 94 ஆயிரம் மலையக மககளுக்கு குடியுரிமை யளிக்கும் மசோதா நிறைவேற்றப் பட்டதுவும். அதற்கு எதிரான கிளர்ச்சி தொடங்கப்பட்டதுவுமான எல்லா நிகழ்வுகளும் சேர்ந்து மீண்டும் ஓர் இனப் படு கொலை மலையகத்தில் நடப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கின. இதை முன் கூட்டியே மலையகத் தமிழர்கள் எதிர்பாத்திருந்தார்கள். போர்என்றால் போர்சமாதானம் என்றால் சமாதானம் என்று செயவர்த்தனா பிரகடனம் செய்தது போலவே இன்று சிறிமா பண்டார நாயக்கா மலையக மக்களோடு போருக்கு தயாராகும்படி சிங்கள மக்களுக்கு அறை கூவல் விட்டு அழைப்பதைக் காணலாம். சிங்களகாடையரும் ஊர்காவல் படையினரும் மலையகத் தமிழர்களை தாக்கத் தொடங்கினர். அவர்களுக்காக கொண்டு செல்லப்பட்ட உணவுப் பொருள்களை சூறையாடினர். இராணுவத்தின் உதவியுடன் சிங்கள வெறியர்கள் நவீன ஆயதங்களினால் தாக்கினர். மலையக மக்களோர் கையில் கிடைத்த தடி, கத்தி போன்றவற்றைக் கொண்டு காடையர்களை விரட்டிவிரட்டி அடித்தனர். அவர்கள் காவல் நிலையத்தில் பதுங்கினர். **சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது போல சிங்கள இனவெறியருக்கெதிராக வெருண்டெழுந்த மலையக மக்கள் பொலிஸ் நிலையம் என்பதையும் பொருட்படுத்தாது தாக்கத்தொடங்கினர்.** அங்கு ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரண்டு பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டார்கள். காவல் நிலையத்தில் பதுங்கி இருந்த காடையர்கள் தலை தெறிக்க ஓடினார்கள். 13,000 சிங்களவர்கள் அகதிகள் ஆனார்கள். இதைக் கேள்வியுற்ற செயவர்த்தனா நிலமை தனது எண்ணத்துக்கு மாறாக தலைகீழாக மாறியதைக்கண்டு, தொண்டைமான், காமினி திசா நாயக்கா, செல்லச்சாமி, ஆகியவர்களை ஒவ்வொரு தோட்டப்பகுதிகளுக்குச் சென்று வன்முறையை கைவிடும்படி கூறச் சொல்லி அனுப்பினார் தொண்டைமான் மலை நாட்டில் வன்முறை என்பது ஒரு சாராருக்கு மட்டும் சொந்தமானதல்ல எனக் கூறிக்கொண்டே மலையக மக்களின் போராட்டத்தை அடக்குவதில் செயவர்தனாவுக்கு தனது பூரண ஒத்துழைப்பையும் வழங்கினார்.

**மலையக மக்களின் போராட்டத்திற்கு சரியான தலைமையை ஏற்படுத்துவதின் மூலம் மட்டுமே அவர்களின் பாதுகாப்புக்கு வழி வகுக்க முடியும். மறுபுறம் இப் போராட்டத்தின் நிலையையும் அதன் விளைவுகளையும் தேசிய சர்வதேசிய ரீதியாக முன்னெடுத்துச் செல்வதன் மூலம். போராடும் மக்களுக்கு ஆக்க ரீதியான ஒரு வலுவை நாமும் கொடுக்க முடியும் என்று மலையக மாணவர் இளைஞர் முன்னணியானது இவ் எரிமலையின் வாயிலாக வெளிப்படுத்துகின்றது.**

இறுதி வெற்றி ஈழப் பாட்டாளி களுக்கே!

—ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippkam.com

# மலையகப் பெண்கள்

மலையகத் தொழிலாளர்கள் மிகவும் ஒடுக்கப்படும் இனமெனக் கூறினால் மலையகப் பெண்கள் நிலையை ஒப்பிட உலகில் வேறு இனமே இல்லை. இவர்கள் பொருளாதார ரீதியாகவும், பிற்போக்குவாத அரசாங்கத்தாலும், இனரீதியாகவும் ஒடுக்கப்படுகிறார்கள். அத்துடன், இவர்கள் ஆண் மேலாதிக்கத்தையும் எதிர் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கூலிகளாகக் கொண்டு செல்லப்பட்ட இவர்களது வரலாறு, மனிதத்துவமற்ற அடிமைகளின் சாட்சியங்களாகவே இன்றுவரை இருந்து வருகின்றது. மலையகப் பெண் தொழிலாளர்களை முதன் முதலாக இந்தியாவில இருந்து இலங்கைக்கு கொண்டு வந்த முதலாவது இந்தியக் கமிஷனர் கப்ரின் இராம் இவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது பெண் தொழிலாளர்கள்தான் ஒழுங்கான, திடகாத்திரமான குறைந்த கூலிக்கு அமர்த்தக்கூடிய இலாபகரமான நம்பகமான வேலையாட்கள்' என்றார். இவர்கள் அடிமைகளாய், விலங்குகளாய், ஊமைகளாய் இது நாள் வரை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காகவே உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மலையகப் பெண்களில் 90% மானோர் உற்பத்திக்காகப் பயன்படும் உழைக்கும் பெண் தொழிலாளர்களாகவே உள்ளனர். இலங்கையில் மொத்த உழைக்கும் பெண்களில் 42% மான மலையகப் பெண்கள் இறப்பர், தேயிலை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் தொழிலாளர்களாகும். இன்றைய முதலாளித்துவ சிறிலங்கா அரசிற்கு குறைந்த கூலிக்கு அமர்த்தப்படும் பெண்களாக இவர்கள் உள்ளனர். கூடியளவு உழைப்பை நல்கும் இவர்களின் வருமானத்தை நோக்கின் சம தொழிலுக்கே பாரபட்சமான சம்பளம் வழங்கப்படும் நிலையை அவதானிக்கலாம். கூடிய மணித்தியாலங்கள் தமது உழைப்பை நல்க வேண்டிய சூழ்நிலைக்கு இவர்கள் தள்ளப்படுகின்றனர். 150 வருடங்களுக்கு முன் ஆணுக்கு 33 சதமும் பெண்ணுக்கு 25 சதமும் சம்பளமாக வழங்கப்பட்டது. இன்று இது ஆணுக்கு 17.71 ஆகவும் பெண்ணுக்கு 14.83 சதமும், வழங்கப்படுகிறது. அதிக நேர உழைப்பினை செலவழிக்கும் பெண் தொழிலாளருக்கு 26% குறைவான சம்பளமே வழங்கப் படுகின்றது.

மலையகத்தில் வேலையில் ஈடுபடும் பெண் தொழிலாளிகளில் அதிகமானோர் கொழுந்து கிள்ளும் (தேயிலைத் தளிர் பரிக்கும்) தொழிலிலேயே ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இங்கு வேலை செய்யும் ஆண்கள் தமக்கு ஒதுக்கப்படும் வேலையினை முடித்தபின் 1 மணியளவில் வீடு திரும்பினாலும் பெண்கள் பறித்த கொழுந்தினை நிறுத்து பொறுப்புக் கொடுத்து விட்டு 4-30 மணியின் பின்னரே வேலைத் தளத்திலிருந்து திரும்புகின்றனர். வீடு சென்றடைய 5-30க்கு மேல் ஆகும். கொழுந்து பரிக்கும் தொழிலுக்கு ஆண்கள் ஈடுபடுத்தப் பட்டாலும் அவர்களுக்கு 25% அதிகமான சம்பளமே கொடுக்கப் படுகின்றது. இது—சமவேலைக்குச் சமசம்பளம் தராத நிலையையும் உழைப்புச் சக்திக்கு தகுந்த இடம் தராததையும் சமூகத்தில் அவர்களுக்கு குறைந்த அந்தஸ்து வழங்கப் படுகின்றது என்பதனையே காட்டுகின்றது.

இவ்வாறு தொழில் ரீதியாக பல இடர்களை அனுபவிக்கும் பெண்கள், அங்குள்ள மேலதிகாரிகள், கங்காணிகள் போன்றோரால் உடல் ரீதியிலும் பாதிக்கப்படும் நிலைக்கும் உள்ளாக்கப் படுகின்றார்கள். இதனால் இளம் வயதிலேயே அஸ்தமனமான வாழ்வில் தள்ளப்படும் இவர்களில் பலர் கணவர், தந்தை, சகோதரர்கள் ஆகியோருக்குக் கட்டுப்பட்டும், ஆண் வேலையாட்கள், கங்காணிமார், மேலதிகாரி ஆகியோரால் ஒடுக்கப்பட்டும் வாழ்கின்றனர். இப்படிப்பட்ட அடக்கு, ஒடுக்கு முறைகளோடு, இலங்கை அரசின் பேரினவாதத்தால் அவ்வப்போது நடத்தப் படுகின்ற இனப்படுகொலையின் போதும் அதிகப்படியாகப் பாதிக்கப் படுபவர்களும் இவர்களே. 77ம் ஆண்டு கலவரம் 83 ஜூலைக் கலவரம் இவற்றில் பல நூற்றுக்கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட்டமையும் கொலை செய்யப் பட்டமையும் இதற்கு சாட்சிகளாய் இருக்கின்றன.

மலையகத்தில் பாதிக்கு மேற்பட்டோர் கல்வியறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்றால், அதில் 90% பெண்களாகவே காணப்படுகின்றார்கள். இங்கு பெண்கள் படிப்பதே ஆபூர்வம். பெண் குழந்தைகள் வயது வரும்வரை வீட்டு வேலைகளைச் செய்யவும், குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், வேலைத்தளத்திற்கு சாப்பாடு எடுத்துச் செல்வதற்கும், மேலதிகாரிகளின் வீட்டு வேலைகளைச் செய்யவுமே பழக்கப் படுத்தப்படுகிறார்கள். பின் தோட்டத்தில் தொழிலாளியாகப் பதிவு செய்யப்படுகிறார்கள். தோட்டங்களில் நிலவும் ஆண், பெண் உறவுமுறைகள் நிலப்பிரபுத்துவக் காலத்தின் பிரதிபலிப்பான ஆண் மேலாதிக்கத்திற்குள் உட்பட்டதாகவே காணப் படுகின்றது.

இப்படியான பொருளாதாரச் சுரண்டல், இன ஒடுக்குமுறை, ஆண் மேலாதிக்க அடக்குமுறை ஆகியவற்றால் சிதைக்கப்படும் மலையகப் பெண்களின் எதிர்கால நல்வாழ்வு என்பது, மலையகப் பெண்களின் புரட்சிகர எழுச்சியிலேதான் தங்கியுள்ளது.

படிப்பகம்

www.padippkam.com

# சிங்களத் தோழர் காமினி சல்வடோருடன் ஓர் சந்திப்பு

இலங்கையின் சிங்கள முற்போக்கு இடது சாரிகளில் சரியான மாக்சீய சித்தாந்தங்களைக் கடைப்பிடிப்பவர்கள் சிலரே. அவ்வகையில் சிறந்த முற்போக்கு இடது சாரிக் கொள்கைகளைக் கடைப்பிடித்து செயலாற்றி வரும் தோழர் திரு. காமினி சல்வடோரை நாம் **பேட்டி** கண்டபோது;

வணக்கம் தோழர்!

வணக்கம்! வணக்கம்!

நீங்கள் மிக அழகாக தமிழில் பேசுகிறீர்களே!

இலங்கையில் சிங்களமும் உண்டு; தமிழும் உண்டு, தமிழை கற்றிருப்பது அப்படி கூடாதது அல்ல.

அது சரி...உங்களைப்போல் பல சிங்கள அரசியல் வாதிகளுமே நினைத்தால் சரி. (கேள்வியைத் தொடர்கிறோம்)

**கேள்வி:** சிறிமா பண்டார நாயக்காவிற்கு குடியுரிமை வழங்கியபின் மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கியதில் ஏதேனும் தொடர்பிருக்கலாமென கருதுகிறீர்களா ?

**பதில்:** அண்மையில் J.R. அவர்கள் 94,000 மலையக மக்களுக்கு பிரஜா உரிமை, மற்றும் வாக்குரிமையையும் வழங்க இருப்பதாகக் கூறியுள்ளார். அவ்வாறு கூறியபடியால் மலையகத்தைப் பொறுத்த வரையில் தமிழர்களை இனிமேல் தேர்தல்களை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. மேலும் சிறிமா பண்டாரநாயக்கா ஆட்சியில் இருந்த நேரத்தில்தான் தோட்டப் பகுதிகள் தேசிய மயமாக்கப்பட்டன. அந்த நேரத்தில் அம்மக்களுக்கு எதிரான அட்டூழியங்களையும் அராஜகத்தையும் அந்த அரசு மேற்கொண்டது. இதனால் சிறிமாவிற்கு மலையகத் தமிழர்களின் வாக்குகள் கிடைக்காதென்பது உறுதியாகத் தெரிந்துவிட்டது. அதே சமயத்தில் ஜே ஆர். ஜெயவர்தனாவின் (யூ.என்.பி, கட்சி) சிங்கள வாக்குகளை தன்னுடைய கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நோக்கித் திருப்புவதற்காகவே சிறிமா பண்டார நாயக்கா மலையகத் தமிழ் மக்களுக் கெதிராக இனவாதத்தைத் தூண்டுவதில் ஈடுபட்டிருக்கிறார். சிறிமா பண்டார நாயக்கா தனது பிரசாவுரிமையை இழந்தபோது எவ்வளவு துன்பப்பட்டிருப்பார் என்று உணர்ந்திருந்தால் உண்மையிலேயே நாட்டு மக்கள் மீது அக்கறை கொண்டிருப்பாரேயானால் மலையகத் தமிழ் மக்களுக்கு மீண்டும் பிரசாவுரிமையும் வாக்குரிமையும் அளிக்கப்பட்டதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக அவர்களுக்கு மீண்டும் பிரசாவுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்படக் கூடாதெனக் கூறியிருப்பது சிறிமாவின் இனவாதக் கொள்கையில் எள்ளளவும் மாற்றமில்லை யென்பதை எடுத்துக் காட்டுகிறது. பழையபடி இனவெறியுடனேயே செயல்படுகிறார். என்பதைத்தான் காட்டுகிறது. சிறிமாவின் இப்போக்கு ஜே.ஆர் ஜயவர்தனாவிற்கு ஒரு விதத்தில் சாதகமாகவேயுள்ளது. எவ்வாறெனில் சிறிமா மேற்கண்டவாறு கூறியிருப்பதால் ஜே.ஆர் ஜயவர்தனா தன்னை இவ்வளவு நெருக்கடியிலும் தான் வாக்குரிமை கொடுக்கப் போவதன் மூலம் தன்னை ஒரு நல்லபிள்ளையாக இந்தியாவிற்குக் காட்டிக் கொள்கிறார். அதே வேளையில், சிறிமா பண்டார நாயகாவிற்கும் காந்தி குடும்பத்திற்கும் இருப்பதாகக் கூறப்படும் நட்புறவிலிருந்து சிறிமாவை கூடாதவராகச் காட்டுவதை வெளிப்படுத்து முகமாகவும் செயல்படுகிறார். மலையகத் தமிழ் மக்களின் முன், தன்னை ஒரு நல்ல பிள்ளையாக காட்டுவதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் கொள்வது ஒரு புறமாகவும், மலையக மக்களை ஈழப்போராட்டத்துடன் தொடர்பு கொள்ளாமல் இருக்கச் செய்வதற்காகவும் அவர் செயல்பட முனைந்துள்ளார். இந்த நிலைமையை சாதகமாக்கி ஈழப்போராட்டத்துடனான மலையக மக்களின் உறவை தடுப்பதற்கு பயன்படுத்துகிறார்.

**கே:** மலையக மக்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த குடியுரிமை 1947ம் ஆண்டு பறிக்கப்பட்டதின் காரணம் யாது ?

**ப:** 1930ம் ஆண்டுகளில் உலகப்பொருளாதாரம் வீழ்ச்சியுற்ற சமயம், அரசு தனி

www.padippkam.com



யார் நிறுவனங்கள் பெருமளவு மூடப்பட்டதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பற்றவர்களாயினர். அச்சமயம், பலம் வாய்ந்த தொழிற் சங்கங்கள் இயங்கி வந்தன. இந்த தொழிற்சங்க இயக்கங்களில் சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி தொழிலாளர்கள் அங்கம் வகித்தனர். ஆனால், இச்சமயத்தில் இந்தத் தொழில் வாய்ப்பு பறிபோனதை மக்கள் மத்தியில் எடுத்து வைக்கத் திராணியற்ற தொழிற்சங்கத் தலைவர்கள், பெரும்பான்மைச் சிங்களத் தொழிலாளர்களின் தொழில் வாய்ப்பினைக் காப்பாற்றுவதற்காக, சிங்களத் தொழிலாளர்களின் தொழில் வாய்ப்பின்மைக்கு புறம்பான காரணமாக, இலங்கையில் இருந்த 'மலையாளிகள், சோனகர்கள், மலையகத் தமிழர்கள் தான் தொழில் வாய்ப்பினையைப் பறிக்கின்றார்கள்' எனக் கோசமிட்டார்கள். இதன்மூலம் சிங்கள பாட்டாளிகளுடைய நன் மதிப்பை காப்பாற்றிக் கொள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் முற்பட்டார்கள்.

1947ல் நடந்த பொது வேலை நிறுத்த காலத்தில் அனைத்துப் பாட்டாளி வர்க்கமும் பங்கு கொண்ட விதத்தைக் கண்டு முதலாளித்துவம் மிகவும் அஞ்சியது. அதே வேளை, 1947ல் நடந்த பொதுத் தேர்தலில் மலையகப் பகுதியில் ஏழு பிரதிநிதிகள் இலங்கை இந்திய காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்கள். முற்போக்கு இடதுசாரி கட்சிகள் பதினான்கு இடத்தில் வெற்றி பெற்றன. இந்த வெற்றி காரணமாக இந்தியர்கள் பற்றி சிங்களவரின் பயம், தொழிலாளர்கள் வர்க்க வளர்ச்சி பற்றி முதலாளித்துவத்தின் பயமும் ஒன்று சேர்ந்தது. இதனால் இந்தியத் தமிழர்களுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களும், கோஷங்களும் நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் உண்டாகின. இதன் விளைவாக 1948ல் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, புதிய சட்டங்கள் மூலம் பறிக்கப்பட்டது. இது தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்திற்குப் பயங்கரமான தாக்கத்தை ஏற்படுத்தியமை இன்று வரையிலும் இலங்கைத் தொழிலாளர்களின் ஐக்கியத்தை உருவாக்குவதற்குச் சவாலாக அமைந்துள்ளது.

**கே:** இடதுசாரிக் கட்சிகள் மலையக மக்களின் போராட்டத்தை முன்னெடுக்காமல் விட்டதேன்?

**ப:** இந்த இடதுசாரிக் கட்சிகள் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட போது, அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். சில கோஷங்களையும் முன் வைத்தார்கள். ஆனால் தடுக்க முடியவில்லை. சிறிது, சிறிதாக பாராளுமன்றவாதத்தில் மூழ்கிய பிறகு தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியம் தொழிலாளர்களின் புரட்சித் தன்மை ஆகியவற்றை எல்லாம் உதறிவிட்டு வாக்கு வேட்டையாடுவதிலேயே செயல்பட்டார்கள். வாக்குரிமையற்ற மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் அக்கறை எடுப்பதன் மூலம் தங்களுக்கான சிங்கள மக்களின் வாக்குகளை இழக்க நேரிடுமெனப் பயந்து தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆனாலும் தொழிற்சங்க ரீதியாக நடத்தப்படும் போராட்டங்களுக்கு தோட்டத் தொழிலாளரின் ஆதரவு தேவைப்பட்டது. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்கங்களை ஏற்படுத்த முன் வந்தார்கள்.

**கே:** மலையக மக்களைப் பற்றி தங்களின் நிலைப்பாடென்ன?

**ப:** மலையக மக்கள் நூறாண்டுகளுக்கு மேலாக மலையகத் தோட்டங்களில் உழைத்து, வாழ்ந்து, மடிந்தாலும் அந்தத் தோட்டங்களையும், அந்தப் பூமியையும் தம்முடையதாகக் கருதுவதில்லை. அதே வேளை ஈழத்தமிழர்கள் இவர்களை தம்முடைய உறவினர்களாகக் கருதுவதில்லை. அவர்கள் அடிப்படை மனித உரிமைகளு மற்றபடியினால் தாங்கள் ஒரு தேசிய இனத்தைச் சார்ந்தவர்களென உணர்வதை விட, தங்களை தொழிலாளர்கள் என்ற ரீதியில், தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுகின்ற மனநிலையில் இருக்கின்றார்கள். இக்காரணங்களினால் மலை

படிப்பகம்

www.padippkam.com



யகத் தமிழர் மத்தியிலும் ஈழத்தமிழர்கள் மத்தியிலும் சில முக்கியமான வேறுபாடுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தமிழ் பேசும் மக்களென்ற ரீதியில் சிங்கள இனவாதத்தின் தாக்குதல்களுக்கு உட்பட்டதனால் அவர்கள் மத்தியில் தாம் ஒரு மலையக மக்களென்ற உணர்வு வளர்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் தேசிய ஒடுக்கு முறைகளுக்கும், அடக்கு முறைகளுக்கும் எதிராக ஈழ மக்கள் நடத்தும் போராட்டம கூட தமக்கொரு பிணைப்பினைக் கொண்டதெனக் காண்கிறார்கள். அடிப்படை உரிமைகளுக்காக போராட வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலையும் இருப்பதனால் சிங்களத் தொழிலாள வர்க்கத்துடன் சேர்ந்து போராட வேண்டிய பங்கொன்றும் உள்ளது. அதனால் மலையகத் தமிழ் மக்களை ஒரு தேசியசிறுபான்மை இனமாகக் கருதுகிறேன்.

**கே:** இந்தியா திரும்பிய மலையக மக்களைப் பற்றிய தங்கள் கருத்து?

**ப:** நான் முதலாவதாக இவர்களுக்காக என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ், தமிழர் என்ற பெரும் உணர்வு இருக்கின்ற தமிழ்நாட்டை நம்பி, தம்தாய் நாடென்று இதைக் கருதி இங்கு வந்த அப்பாவி மலையக மக்கள் மீது தமிழக மக்களும், அரசும் நடத்துகின்ற பாரபட்சங்களைக் காணும்போது மிகுந்த மன வேதனையும், ஆத்திரமும் அடைகிறேன் (இவர்களை: இன்றும் 'சிலோன் அகதிகள்' என்று பார்கின்ற அந்நியப்பார்வையின் தன்மையினையும் சுட்டிக் காட்டுகின்றார்).

**கே:** மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாமெனக் கருதுகிறீர்கள்?

**ப:** மலையக மக்கள் இரண்டு விதமான பிரச்சினைகளுக்குட்பட்டுள்ளார்கள். தமிழ் பேசும் மக்களென்ற ரீதியில் இன ஒடுக்கு முறைக்கும், தொழிலாளர்கள் என்ற ரீதியில் வர்க்க ஒடுக்கு முறைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இதனால் இவர்களுடைய எதிர்காலம் ஈழப் பேராட்டத்துடனும், சிறிலங்காவின் சோசலிசப் புரட்சியுடனும் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை யாரும் மறுக்க இயலாது.

ஈழப் போராட்டம் முனைப்பாகிக் கொண்டிருக்கும் பொழுது, அதன் காரணமாக இலங்கை சோசலிசப் புரட்சிக்கு வழி கோருகின்ற தன்மையையும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே இந்தப் புரட்சிக்களில் மும்முரமாகவும் தவிர்க்க முடியாதவாறும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

**கே:** மலையகத் தொழிற்சங்கத் தலைவர்களைப் பற்றி?

**ப:** ஏற்கனவே இடதுசாரித் தலைவர்களைப் பற்றிக் கூறியுள்ளேன். முதலாளித்துவ சிந்தை கொண்ட தலைவர்களைப் பற்றி கூறவேண்டியதில்லை அது தெரிந்த பல்லவிதானே.

**கே:** மிக அருமையாகத் தமிழிலே எம் கேள்விகட்குப் பதில் அளித்ததையிட்டு நன்றி கூறுகின்றேன். மீண்டும் எரிமலை வாசகர்களுக்காக பேட்டி அளிப்பீர்களா?

**ப:** மக்கள் மத்தியில் தெளிவான கருத்துக்களைச் சொல்ல தயங்கவோ பயப்படவோ மாட்டேன். நிச்சயமாக பேட்டியளிப்பேன் நன்றி, வணக்கம்

பேட்டி கண்டவர்:

**(அன்ரன், மலையூரான்)**

---

## இலங்கை மலையக மக்கள் வருகை

மலையக தமிழரின் வருகை 1796 இல் இருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து கம்பெனியாளர்களால், துறைமுகத் தொழிலாளர்களாவும், இதர தொழிலாளராகவும் கொண்டு வரப்பட்டனர் எனினும்......... 1923ம் ஆண்டு கம்பளைக்கு அருகேயுள்ள சிங்கபிட்டிய என்ற கிராமத்தில். கெப்டன் ஹென்றி போர்ட் என்ற பிரிட்டிஷ்காரர், இந்தியாவில் இருந்து 14 தொழிலாளர்களை வரவழைத்து மிகவும் வெற்றிகரமான முறையில் கோப்பி பயிர் செய்தான்.

**—மலையக மக்களின் வரலாறு**

படிப்பகம்

www.padippkam.com

# அகதிகள் கொத்தடிமைகள் ஆக்கப்படுகிறார்கள்!

இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட அகதிகள் இங்கு அகதிகளாக மட்டுமல்ல, கொத்தடிமைகளாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதற்கு சமீபத்திய கொடைக்கானல் நிகழ்ச்சிகள் சான்று பகர்கின்றன. இலங்கையின் வளர்ச்சிக்காகவே காலங்காலமாய்ப்பாடுபட்டும் உரிமைகள் பறிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட அவர்கள், இந்தியாவைத் தாயகமாக நினைத்து எதிர்கால வாழ்வின் இன்பக் கனவுகளைச் சுமந்து கொண்டு வந்தார்கள். ஆனால்-அவர்களின் கனவுகளெல்லாம் இப்போது மண்ணோடு மண்ணாகிப் போனதன்றி இங்கு வந்து அணுவணுவாய்ச் சித்திரவதைப் பட்டுச் சாவதைவிட நாம் பிறந்த அந்த மண்ணில் சுதந்திரத்திற்காகப் போராடி உயிர் துறந்திருக்கலாமே! என்று இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

கொடைக்கானல் மலையில் வனத்துறையின் அனுமதியுடன் சவுக்கு (வாடில்) மரப் பட்டைகளை உரித்தெடுக்கும் வேலையை டான் இந்தியா, விஸ்கோஸ் உட்பட சில பெரிய கம்பெனிகள் காண்ட்ராக்டரிடம் ஒப்படைத்திருக்கிறது. இந்தக் காண்ட்ராக்டர்கள் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட அகதிகள் பலரிடம் சென்று ரூபாய் நூறு, நூற்றைம்பது அட்வான்ஸ் கொடுத்து (வீடு கட்டித் தருவோம், கம்பளி கொடுப்போம், மருத்துவ வசதியுண்டு, பிள்ளைகள் படிக்க வசதி செய்து கொடுப்போம் என்று பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து) மலைக் காடுகளில் உள்ள கூப்புகளுக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள். இவற்றில் சில என். எம். ஆர், பாரிக் கோம்பை, கூக்கல் இடமங்கரை ஆகியன.

கொடைக்கானல் இன்டர் நேஷனல் பள்ளி மாணவர்கள் தங்கள் படிப்பு தொடர்பாக நடத்திய ஆய்வில் கொடைக்கானல் மலையில் இலங்கை அகதிகள் கொத்தடிமை ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிக்கை வெளியிட்டார்கள். இது சம்பந்தமாக சிராக் என்ற சமூக சேவை நிறுவனத்தின் ஊழியர் சிவா சாந்தகுமார் (நாடு கடத்தப்பட்ட இலங்கை அகதி) சப் கலெக்டர் குர்னிகால் சிங்கிடம் புகார் கொடுத்திருக்கிறார்.

மார்ச் 7ம் தேதி சப் கலெக்டர் குர்னிகால் சிங் என். எம். ஆர் கூப்புக்கு செல்கிறார். அங்கிருந்த இலங்கை அகதிகள் அவர் காலில் விழுந்து கதறுகிறார்கள் 'எங்களைக் கூட்டிக்கிட்டு வரப்போ எல்லா வசதியும் செஞ்சு தர்றோம்னு ஏமாத்திக் கூட்டிக்கிட்டு வந்தாங்க. இங்க வந்த பின் புள்ளைகளுக்குச் சொகமில்லைன்னா புருஷன் பொஞ்சாதி ரெண்டு பேரும் புள்ளையைத் தூக்கிக்கிட்டு ஆஸ்பத்திரிக்கு போக முடியாது புருசன் போனாபொஞ்சாதி இருக்கனும் பொஞ்சாதி போனா புருசன் இருக்கனும். ஏன்னா நாங்க இந்த இடத்தை விட்டு ஓடிப் போயிடுவோமாம். வெள்ளைப் பேப்பர்லே ஸ்டாம்பிலே கையெழுத்துப் போட்ட பொறவுதான் பணம் தருவாங்க. அதுவும் சரியா கொடுக்கிறது இல்லே. எங்களைக் கூட்டிக் கிட்டு வந்தப்போ டன்னுக்கு 230 ரூபாய் தருவோன்னு சொன்னாங்க. ஆனா இப்ப டன்னுக்கு 130, 150 தான் தர்ராங்க. ஏன்னு கேட்டா ஆள் வச்சு மெரட்டுராங்க. வேலை பார்த்த காசைக் கேட்டா செருப்புனால்ல அடிப்பேன்னு கேட்குராங்க.



குர்னிகால் சிங்

படிப்பகம்

www.padippkam.com



''நாங்க வேலை பார்த்த சம்பளத்தை கொடுக்க மாட்டேங்கருங்க. தெனமும பசியும் பட்டினியுமா துடிக்குறோங்க. எங்கள காப்பாத்துங்க சாமி!''

இதைக் கேட்ட சப்கலெக்டர் மனிதாபிமான உணர்வோடு செயல்பட ஆரம்பிக்கிறார். என். எம். ஆர். கூப்பில் 42 குடும்பத்தினர் கொத்தடிமைகளாய் நடத்தப்படுகிறார்கள்' என்று அறிக்கை தயாரித்து வைத்து 10ம் தேதி சப் காண்ட்ரக்டர்களான குருசாமி, ராஜசேகர் மற்றும் டான் இந்தியா மேனேஜர் (மூலப் பொருள்) மொய்தீன் ஆகியோரை நேரில் அழைத்து இந்த ஏழைகளின் சம்பளப்பாக்கி ரூபாய் 20 ஆயிரத்தை 13ம் தேதிக்குள் பட்டுவாடா செய்ய வேண்டும். இன்றேல் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும என்று கூறுகிறார். அவர்கள் 11 ஆயிரம் ரூபாயைக் கட்டிவிட்டு பாக்கியை 14ம் தேதிக்குள் கட்டுவதாகக் கூறிவிட்டுச் செல்கிறார்கள்.

14ம் தேதி அவர்கள் வரவில்லை. அவர்களின் வக்கீல் வருகிறார். அவர்கள் மீது ''அரஸ்ட்வாரண்ட்'' போடுகிறார் சிங். டான் இந்தியா கம்பெனியிலிருந்து மேல் மட்டம் வரை தந்திகள் பறக்கின்றன. குர்னிகால் சிங் எல்லை மீறி நடவடிக்கை எடுத்து விட்டாராம்!

18ம் தேதி அண்ணா மாவட்டக் கலெக்டர் மாதவன் நம்பியார், பாஸ்கர் என்ற வக்கீல் தலைமையில் தம்மைச் சந்தித்த பி.யூ.சி. எல் குழுவினரிடம் இது 'கொத்தடிமைகள் பிரச்சினை இல்லை. கூலிப் பிரச்சினை' என்று பிரச்சினையைத் திசை திரும்புகிறார். குர்னிகால் சிங்கிடம் இருந்த பைல்கள் டி.ஆர்.ஓ விசாரணைக்கு மாற்றப் படுகின்றன.

இந்தப் பிரச்சினை குறித்து பந்தியா முக்தி மோர்ச்சா சுப்ரீம் கோர்ட்டில் மனு ஒன்றை தாக்கல் செய்கிறார். தலைமை நீதிபதி பி.என். பகவதி, நீதிபதிகள் வி. கலீத், ஜி.எல். ஓசா ஆகியோர் அடங்கிய பெஞ்சு இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டு சில உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றனர். 1. காண்ட்ராக்டர்களிடமிருந்து வசூலித்த 11 ஆயிரம் ரூபாயை 42 அகதிகள் குடும்பத்துக்குக் கொடுக்கப் படவேண்டும். 2. 'சொஸைட்டி ஃபார் கம்யூனிட்டி ஆர்கனைசேசன்' என்ற இயக்கத்தின் நிர்வாகி ஏ. மெகபூப் பாட்சா தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் நியமித்து, அதன் அறிக்கையை ஏப்ரல் 24க்குள் கோர்ட்டில் சமர்ப்பிக்க வேண்டும். 3. இந்த வழக்கு விசாரணை நேரத்தில் கொடைக்கானல் சப் கலெக்டர் குர்னிகல் சிங்கை மாற்றக்கூடாது.

இந்த உத்தரவைத்தொடர்ந்து 15-4-86ல் மெகபூப் பாட்சா தனது உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட குர்னிகால் சிங், இண்டியன் எக்ஸ்பிரஸ் நிருபர் டி. என். கோபாலன் ஆகியோருடன் விசாரணையைத் தொடங்குகிறார். உள்ளூர் அ.தி.மு.க, தி.மு.க, ஜனதா, வர்த்தக சங்கம் போன்ற அனைத்துக்கட்சிக் காரர்களும் ஒரே மாதிரி கையில் லெட்டர் பேட்டுடன் அறைக்குள் நுழைந்து கோஷம் எழுப்புகிறார்கள்' குர்னிகால் சிங்கே வெளியேறு...கோபாலனே வெளியேறு...'' மெகபூப் பாட்சா இவர்களைப் பார்த்து'' சுப்ரீம் கோர்ட் உத்திரவுப்படி குர்னிகாலும் கோபாலனும் கமிஷனின் உதவி அதிகாரிகள்'' என்று சொன்னது அவர்கள் காதில் நுழையவில்லை. ''அவர்கள் வெளியேறாவிட்டால் நாங்கள் வெளிநடப்பு செய்வோம்'' எனக்கட்சித் தலைவர்கள் குரலெழுப்பவே குர்னிகால் எழுந்து பக்கத்து அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொள்ள கோபாலனும் அவரைப்பின் தொடர்கிறார். 'கொத்தடிமைகள் என்பதே கொடைக்கானலில் இல்லை. இது அமெரிக்காவின் சதி'' என்று இந்தக் கட்சித் தலைவர்கள் கோரசாகக் குரல் கொடுக்கிறார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் ரங்கநாதன், தான் நேரில் சென்று கூப்பில் பார்வையிட்டதாகவும் அகதிகள் நிலை பத்திரிகைகளில் சொல்லப்பட்டதை விட மோசமாக உள்ளது என்றும் கூறுகிறார். வெளியே நீண்ட நேரம் காத்திருந்த அந்தத் தொழிலாளர்கள் பொறுமையிழந்து உள்ளே நுழைந்து தம்மையும் விசாரிக்க வேண்டு

www.padippkam.com



மென்கிறார்கள். இந்நாடு கடத்தப்பட்ட தமிழ் (அகதிகள்) கொத்தடிமைகளைப் பார்த்ததும் தலைவர்கள் அறையை விட்டு வெளியேறுகிறார்கள். (கம்யூனிஸ்ட் கட்சிக் காரரைத் தவிர) அந்தக் கட்சிக் காரர்கள் சப் காண்ட்ராக்டர்களாம்!

குறிஞ்சி நகர தி. மு. க செயலாளர் மைக்கேல்தாஸ் உள்ளே நுழைந்து 'கொத்தடிமைகள் இருப்பது உண்மைதான். அவங்களுக்கு உடனே நிவாரணம் கிடைக்கணும்' என்று கூற ஒரு குழப்ப நிலை தோன்றுகின்றது. இந்த கட்சியின் தலைவர் கொத்தடிமைகள் இல்லவே இல்லை என்கிறார். இவர் எதிர்மாறாகக்கூறுகிறார். விசாரணைகள் தொடரும்போது மீண்டும் ஒரு மாற்றம். சுப்ரீம் கோர்ட் புதிய உத்தரவு போட்டிருக்கிறது. இதன்படி கமிஷனின் உதவி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருந்த குர்னிகால் சிங்கும் கோபாலனும் மாற்றப்பட்டு அந்த இடத்தில் ஒய்வு பெற்ற நீதிபதி பால் மற்றும் சங்கரன் ஆகியோர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விசாரணை தொடர்கிறது. நாடு கடத்தப்பட்ட இந்த அகதிகளுக்கு நியாயம் கிடைக்குமா? இந்த கேள்வி எழுவதற்கு சில முக்கியமான காரணங்கள் உள்ளன.

1. அநாதைகளாய்—இருந்த இந்த மக்களுக்காக நியாயமான முறையில் நடந்து கொண்ட மனிதாபிமானம் கொண்ட சப் கலெக்டர் விசாரணைக் கமிஷனிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

2. இலங்கைத் தமிழர்களுக்காக கண்ணீர் வடிக்கும் அரசியல் கட்சிகள், கொத்தடிமைகள் விசயத்தில் காண்ட்ராக்டர்களுக்கு ஆதரவாய் செயல்படுகின்றன. (கம்யூனிஸ்டு தவிர)

3. இது நக்சல் பாரிகளின் தூண்டுதல் என்று முதலாளிகள் பிரச்சினையை திசை திருப்பி விடுகிறார்கள்.

4. கிறிஸ்துவ மதத்தில் மக்களைச் சேர்ப்பதற்காக கிறிஸ்துவ ஸ்தாபனங்களின் தூண்டுதலால் ஏற்படுத்தப்பட்ட பொய்ப் பிரசாரம் என்று இந்து முன்னணியும் அதனை சார்ந்த அமைப்புகளும் பொய்ப் பிரச்சாரம் செய்து பிரச்சினையை திசை திருப்புகின்றன.

5. எல்லாவற்றிற்கும் மேலாக இந்த அகதிகளை கொத்தடிமைகளாய் ஆக்கியவர்களின் கை சுப்ரீம் கோர்ட் வரை உயர்ந்துள்ளது. (கமிஷன் நபர்களையே மாற்றும் அளவுக்கு.)

இந்தச் சந்தேகங்கள் நியாயமானவையே சரியான தீர்ப்பை எதிர்பார்ப்பதும் கனவாகவே முடியும்? தீர்வுதான் என்ன?

அகதிகளாய் நாடு கடத்தப்பட்ட அனைவரும் ஒருங்கிணைந்துசெயல்பட்டாலொழிய இதனை மட்டுமல்ல இதனைப்போன்ற பல பிரச்சினைகளுக்கும் நமக்கு நல்ல தீர்ப்பு—நிச்சயம்—கிடைக்காது!

(நன்றி: ஜூனியர் விகடன், தினமணி)



நாம் மக்களுக்கு தலைமைத் தாங்க வேண்டிய நிலையேற்பட்டுருப்பதானது, வரலாறு எம் தலைமீது சுமத்தியுள்ள பொறுப்பே தவிர எமக்குக் கிடைத்துள்ள அதிகாரமல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து சொள்ள வேண்டும்.

—தோழர் க. பத்மநாபா

**எரிமலை இதழுக்கு உறுப்பினராவீர்!**

| | | |
|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 1 00 |
| ஈழத்தில் | | 2 00 |
| ஆண்டுக் கட்டணம் | | 15 00 |

தொடர்புக்கு—எம். எல். தாசன்

# எரிமலை

.19, மூன்றாவது தெரு,
சக்காரியாக் குடியிருப்பு
சென்னை-600 094.

படிப்பகம்

www.padippkam.com

# பீரங்கிப் படகு இராஜ தந்திரம் !
# லிபியா மீது தாக்குதல் !

## உலகப் போரைத் தூண்டும் ஏகாதிபத்தியம்

அமெரிக்கா இந்த ஆண்டின் குறிப்பாக இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் உலகத்தின் சில பகுதிகளை ஓர் பிரச்சினைக் குரிய மையமாக்கி அதன் மூலம் தனது ஏகாதிபத்திய நோக்கங்களை நிறைவேற்றுவதே குறிக்கோளாக இருந்து வருகின்றது. அதனது ஒரு பகுதியே லிபியாவின் கடற் பிராந்தியத்தில் தனது போர் அறிக்கையை செய்தும் வலுச்சண்டைக்கும் இழுப்பது மாகும். இது ரீகனின் பேட்டை ரவுடிகள் செயலுக்கு ஒத்ததாகும். அதாவது தனது சுரண்டலுக்கும் ஏகாதிபத்திய நோக்கத்திற்கும் ஆமாம் சாமி போடாமல் இருக்கும் நாடுகள் எல்லாம் அமெரிக்காவின் எதிரிகளாகும். இதை அமெரிக்கா மூன்று வகையாக கையாளும்.

1. தனது கைப்பொம்மை அரசைக் கொண்டு பிரச்சனையைக் கொடுத்து வார் டென்சனை (போர் நெறிகளை) தூண்டுதல்

2. இந்தியாவிற்கு எதிராக பாக்கிஸ்தான், சிரியாவிற்கு எதிராக இஸ்ரேல், இம்முறை கையாள முடியாமல் போனால் அந்தந்த நாடுகளில் உள்ள எதிர் புரட்சியாளர்களை விலை கொடுத்து வாங்கி தனது நாடகத்தை நடத்தும்.

உதாரணம் :—

I ஆப்கானிஸ்தான் — எதிர்ப் புரட்சியாளர்கள்

II நிக்கராகுவா — கொன்ராஸ்

III அங்கோலா — யூனிட்டா

இது இரண்டு முறைகளும் சரிவராது போனால் 3 வது முறையான மிகவும் பிரபல்யமான பீரங்கி படகு இராஜ தந்திரத்தை கையாளும். இதுவே லிபியாவின் சிற்றா வளைகுடாவில் நடந்தது. முன்பு இந்திய பாகிஸ்தான் போரில் 1971 என்டர்பிரஸ் எனும் ஏழாவது கடற்படையை அனுப்பி அமெரிக்கா மூக்கு உடைபட்டதை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமாகும்.

இம்முறை அமெரிக்கா லிபியாவைத் தேர்ந்தெடுத்ததிற்கு முக்கிய காரணம் அரபு நாடுகளில் மிக வேகமாக ஏகாதிபத்திய எதிர் புணர்வு விசேசமாக அமெரிக்காவிற்கு எதிரானதாக மக்களிடையே வளர்ந்து வருகிறது. இவ்வளவு நாளும் இஸ்ரேலைத் தனது செய்கருவியாக உருவாக்கி அதன் மூலம் தனது நோக்கத்தை நிறைவேற்றியதோடு அல்லாமல் தனது பிற்போக்கு நண்பர்களாகிய சவுதி அரேபியா, ஜோடான், எகிப்து ஆகியவற்றிற்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்து இரட்டை வேடம் போட்டது ஆனால் தற்பொழுது அரபு மக்கள் விழிப்புணர்வு கொள்வதுடன் அமெரிக்காவின் சகாக்கள் என்று சொல்லப்படும் முபாரக் உசேன் போன்றவர்களை எப்பொழுது தூக்கி எறியப்படுவார்கள் என்னும் நிலையை உருவாக்கி வருகிறார்கள். இந்த நிலையில் ஈரான் ''சா''வை அமெரிக்காவினால் காப்பாற்ற முடியாமல் போய் விட்டது போன்ற மற்ற வலதுசாரி தலைவர்கள் அமெரிக்காவின் நட்பில் நம்பிக்கையீனம் ஏற்படாமல் இருப்பதற்கும் இது ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தியது. பயங்கரவாதிகளுக்கு கேனல் கடாபி ஆதரவளிப்பது என்பது, ஒரு போலியான வேடிக்கை. உண்மையில் உலகின் பயங்கரவாதத்தை தலைமை தாங்கி நடத்துவது அமெரிக்காவே ஆகும். உலக வரலாற்றிலே விமானக் கடத்தலை துவக்கி வைத்த பெருமை அமெரிக்காவையே சாரும். உதாரணம்:- தொடர்ச்

---

### முதலாவது இடது சாரி கட்சி உதயம்

1935 டிசம்பர் மாதம் இலங்கையின் முதலாவது இடது சாரி கட்சியான லங்கா சமசமாஜக்கட்சி ஆரம்பமானது.

**(மலையக மக்கள் வரலாறு)**

---

படிப்பகம்

www.padippkam.com



சியாக இரண்டு கியுபா விமானங்கள் கியுபாவின் எதிர் புரட்சியாளர்களினால் அமெரிக்காவின் புளோரிடாவில் தரை இறக்கப்பட்டது. இதற்கான செயற் திட்டத்தை வகுத்துக் கொடுத்தது சி.ஐ ஏ. ஆகும். உலக வரலாற்றில் சி.ஐ.ஏயினால் திட்டமிட்டு செய்யபட்ட கொலைகள் எண்ணில் அடங்காதவை. உதாரணத்திற்கு 84 முறை பிடல் காஸ்ட்ரோவைக் கொலை செய்வதற்கு எத்தனித்தது. இந்த நிலையில் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைதான் லிபியாவை தாக்கியது என அமெரிக்க வெளிவிவகாரத் துறை கூறுகிறது. இது ரீகனைப் போல் குழப்பமான மூளை உடைய 3ம் தர சினிமா நடிகனின் கதை ஆகும். லிபியா தனியாக இல்லை என்பதையும் அமெரிக்காவிற்கு எதிராக உள்ள கைகளின் சக்தி ஓங்கியுள்ளது என்பதையும் அமெரிக்கா லிபியா விடயத்தில் புரிந்து கொண்டிருக்கும் உலக அபிப்பிராயத்தை அறியும் பொருட்டே அமெரிக்கா லிபியா மீது தாக்குதல் நடத்தியதா என்றும் ஒரு சந்தேகம் நிலவுகின்றது. மத்திய தரை கடற் பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு லிபியா தடையாக இருந்து வருவதனாலும் ஆப்பிரிக்காவில் எழுச்சி பெற்று வரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கு லிபியா முழு ஒத்தாசைகளையும் வழங்கி வருவதனாலும் லிபியாவை அடக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் எண்ணமாகும். லிபியாவில் ஒரு பிற்போக்கு ஆட்சியைக் கொண்டு வந்து விட வேண்டும் என்பது அமெரிக்காவின் கனவாகும்.

ஆனால், கிரனடாவில் விட்ட ராக்கட்டை லிபியாவில் விட முடியாது என்பதை இப்போதாவது ரம்போ ரீகன் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

—தோழர் **நடன்**

## முதலாவது தொழிற் சங்கம் ஆரம்பம்

1898ல் இடம் பெற்ற அச்சுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் முதலாவது தொழிற் சங்கத்தைத் தோற்றுவித்தது.

**(மலையக மக்களின் வரலாறு)**

## இலங்கையில் முதலாவது வேலை நிறுத்தம்!

இலங்கையில் முதலாவது தொழிலாளர்களின் வேலை நிறுத்தமான தேர்ஸ்டன் கைத்தொழில் பாடசாலையைச் சேர்ந்த தச்சர்களின் வேலை நிறுத்தம் 1960ல் நடைபெற்றது இவ்வேலை நிறுத்தம் ஒரு வருடம் நீடித்தது.

**மலையக மக்களின் வரலாறு**

## அவர்கள் எழுந்து விட்டார்கள்!

ஆண்டாண்டு காலமாக
அனுபவித்த வேதனைகளிலிருந்து ...
எதிரியால் அவர்கள்
வீழ்த்தப் பட்டிருந்த பெரும்பள்ளத்திலிருந்து...
அவர்கள் எழுந்து விட்டார்கள்!
கண்ணிமைகளின் மீது
குருதி கொட்டுகிறது!
விரிந்த மார்பின் மீதும்
குருதி வெள்ளம் ஓடுகிறது.
ஆனாலும் அவர்கள் சிரிக்கிறார்கள்.
இதற்குமுன் என்றுமே அவர்கள்
இப்படிச் சிரித்ததில்லை.
ஜுவாலை பொங்கும் அவர்களது விழிகள்
அங்கும் இங்கும் அலைபாய்கிறது;
அவர்களை பள்ளத்தில் வீழ்த்திய
எதிரியைத் தேடி...
அவர்கள் எழுந்து விட்டார்கள்
எழுந்து விட்டால்... — அவர்கள்
கொடு விலங்குகளிலும் வலிமையானவர்கள்!
எல்லா மனிதரையும்விட
புத்திசாலியானவர்கள் !
இழந்து விட்ட வாழ்வை
எதிரியின் மரணத்திலிருந்து தான்
பறித் தெடுப்பார்கள்!
அவர்கள்—
இப்படித்தான் இருக்க வேண்டும்.

—**தோழர் அய்குங்.**

படிப்பகம்

www.padippkam.com

# நாடு கடத்தப்பட்டோர் நடுத்தெருவில்

## பாதிக்கப்பட்டவர்களிடம் சேகரிக்கப்பட்ட உண்மைகள்

### தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி

1964ம் ஆண்டு சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் 1974ம் ஆண்டில் சிறிமா-இந்திரா ஒப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்படும் மலையக மக்கள் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நிறுவனங்களில் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றுதரும் பணியினைத் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி 1975 ஆம் ஆண்டிலிருந்து செய்து வருகிறது.

ஒரு தனியார் தொழிற்சாலையில் நாடு கடத்தப்பட்டவர் குடியமர்த்தப்பட்டால் அந்த தொழிற்சாலைக்கு தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி ஒரு குடும்ப தலைவருக்கு ரூ 10000/-வரையில் கடனுதவி அளிக்கிறது. இந்த அடிப்படையில் தமிழ் நாட்டிலுள்ள பல தனியார் தொழிற்சாலைகள் நாடு கடத்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாகக் கூறி மேற்கண்ட வங்கியில் இருந்து, பல லட்சக்கணக்கான ரூபாய்களை கடனாக பெறுகின்றன. தமிழகத்தில் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றுள்ள 75% வீதமான தொழிற்சாலைகளில் அவர்களுக்கு பயிற்சி காலத்திற்கு பின்னர். சம்பளம், வீட்டுவசதி, குடிதண்ணீர் வசதி. ஆகியன செய்து தரப்படுவதில்லை. இதனைப் படம் பிடித்துக் காட்டும் ஒரு சில உதாரணங்களைப்பாருங்கள்.

### ஸ்டேன் மோர் தோட்டம் ஏற்காடு சேலம் மாவட்டம்

ஸ்டேன் மோர் தோட்ட உரிமையாளர் 50, குடும்பங்களுக்கு மேல் தனது காப்பித் தோட்டத்தில் வேலை அளிப்பதாகக் கூறி தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ளார். இவர் நாடுகடத்தப்பட்டோருக்கான ஆறுமாதகால பயிற்சிக்குபின் அவர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை வழங்க வில்லை, அத்தோடு குடியிருப்பு பராமரிப்புகளைக் கொண்டு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. குடிநீர்வசதி கழிப்பிட வசதி, குழந்தைகள் படிப்பதற்கான கல்வி வசதி, எதுவும் செய்யப்படவில்லை. மேற்கண்ட காரணங்களுக்காக அங்கு வேலைக்கமர்த்தப்பட்ட மலையக மக்கள் குரல்-எழுப்பினார்கள் ஆனால் தோட்ட நிர்வாகம் அவர்கள் காப்பிக் கொட்டை திருடினார்கள், அசம்பாவிதம் ஏற்படுத்தினார்கள் என்றெல்லாம் பொய் வழக்குகளை அந்த மக்கள் மீது சுமத்தினார்கள். இதனால் அவர்கள் சேலம் மாவட்டம் ஆட்சியரின் அலுவலகம் முன் உண்ணாவிரதம் போன்ற நடவடிக்கைகளில் இறங்கியும் கூட இன்னும் இவர்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை, தற்போது இந்த நாடுகடத்தப்பட்ட மலையக மக்கள் சேலம் மாவட்ட ஆட்சியரின் அனுசரணையின் பேரில் சேலம் நகரில் மணியனூர் என்ற இடத்தில் குடியிருப்பு மட்டும் கட்டிக் கொடுக்கப்பட்டு, தினக் கூலிக்கு பல இடங்களில் வேலை செய்து வருகின்றார்கள். இந்த நாடு கடத்தப்பட்டோர்களுக்காக ஸ்டேன் மோர் தோட்ட உரிமையாளர் தாயகம் திருப்புயோர் கூட்டுறவு வங்கியில் இருந்து பெறப்பட்ட கடனை இன்னும் திரும்பி செலுத்தப்படவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

### மதன் எக்ஸ்போர்ட், ராமாவரம் கடலூர் தென் ஆற்காடு மாவட்டம்

தென்ஆற்காடு மாவட்டம் கடலூருக்கு அருகில் மதன் எக்ஸ்போர்ட் என்ற தொழிற்சாலையில் 50க்கு மேற்பட்ட நாடு கடத்தப்பட்ட மலையக மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் இவர்களுக்குப் பயிற்சிக் காலமான ஆறுமாதத்திற்குப் பின் முறையான ஊதியம் வழங்கப்படவில்லை, பல மாதங்கள் நிலுவையிலுள்ள சம்பள பாக்கியை உடனடியாக சம்பளப் பாக்கியை வழங்கப்பட வேண்டும் என்றும், தொடர்ச்சியான வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்வும், நாடு கடத்தப்பட்ட மலையக மக்கள் கோரிக்கை விடுத்தார்கள் இதில் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி அதிகாரிகள் தலையிட்டும் பிரச்சினைகள் சுமுகமாக தீரவில்லை. இறுதியாக கடலூரில் உள்ள தொழிலாளர் நல அலுவலர் முன்னிலையில் உடனடியாக சம்பளப் பாக்கியைத் தர வேண்டும் என்றும் தொடர்ச்சியான வேலை வாய்ப்பும் வழங்க வேண்டும். குடியிருப்புகள் மற்ற வசதிகள் செய்துத்தரப்படல்வேண்டும் எனவும் 1985ம் ஆண்டின் இறுதியில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மேற்கண்ட ஒப்பந்தத்தை நிறை வேற்றுவதற்குப் பதிலாக அங்கு முன்னின்று தொழிலாளரை வழி நடத்திய சங்கத்தலைவர்களை வேலையிலிருந்து நீக்கி தொழிற்சாலையின் உரிமையாளர் பழிவாங்கி இருக்கிறார். அரசாங்கம் தலையிட்டும் இங்கு இன்னும் பிரச்சினை தீரவில்லை. நாடு கடத்தப்பட்ட மலையக மக்கள் நிலையான சம்பள

படிப்பகம்

www.padippkam.com



மும் தொடர்ச்சியான வேலை வாய்ப்பு இன்றி அவதிப்படுகின்றார்கள்.

## பவானி மில்ஸ்: கோவை

இது தாயகம் திரும்பியோர் வங்கியில் நிதியுதவி பெற்று நடத்தப்படும் ஒரு தனியார் நூற்பு ஆலையாகும். இங்கு பணியாற்றும் மலையக மக்களுக்கு வீட்டு வசதியளிக்கப்படவில்லை, நியாயமான ஊதியம் வழங்கப்படவில்லை, மேற்கண்ட கோரிக்கைகளை நிர்வாக உரிமையாளரைக் கேட்டபோது எதையும் வழங்க மறுத்தார். இதனால் நாடு கடத்தப்பட்ட மக்கள் கூட்டுறவு வங்கி அதிகாரிகளை நாடினார்கள். அதிகாரிகள் பிரச்சனைகளை முழுமையாக தீர்க்க முயலவில்லை. எனவே அவர்கள் நாடு கடத்தப்பட்ட மக்களிடம் ''கொஞ்ச நாட்கள் ஒத்துப் போங்கள் எல்லாம் சரியாகிவிடும்'' எனப் புத்திமதி கூறினார். இதற்குப் பின்னரும் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை, மாறாக மில் முதலாளி நாடு கடத்தப்பட்ட மலையக மக்களை குண்டர்கள் மூலமாக தாக்கிய தாக செய்திகள் வந்துள்ளன. இதன் காரணமாக இந்த மில்லில் பணியாற்றிய பலர் அங்கிருந்து வெளியேறி நீலகிரி பகுதிக்குச் சென்று தனியார் தோட்டங்களில் வேலை செய்து வருகின்றார்கள். தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியும் இதில் சரியாக தலையிட்டு பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கவில்லை.

## மாலெக் லெதர்ஸ்

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள மாலெக் லெதர்ஸ் சுபிதா லெதர்ஸ், போன்ற நிறுவனங்கள் 100க்கும் மேற்பட்ட நாடுகடத்தப்பட்ட மலையக மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாகக்கூறி லட்சக்கணக்கான ரூபாய்களை தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியிடம் பெற்றுள்ளது. இங்கேயும் இதேபல்லவிதான் ஆறுமாதப்பயிற்சிக்கு பின்னரும் நாடு கடத்தப்பட்ட மலையக மக்களுக்கு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊதியம் வழங்கப்படவில்லை. இங்கு பணியாற்றும் தொழிலாளர்கள் வங்கி அதிகாரி, தொழிலாளர் நல அதிகாரி மற்றும் மறுவாழ்வு இயக்குனர் ஆகியோரிடம் தங்களுடைய பிரச்சனைகளுக்கு பரிகாரம் கேட்டனர். எங்கும் முறையான விடை கிடைக்கவில்லை. இறுதியாக சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். ஆனால் மாலக் லெதர்ஸ் நிறுவனத்தினர் தங்களுடைய பண பலத்தினால் ஒவ்வொரு தடவையும் விசாரணையில் தவணை பெற்று வருகின்றார். ஒரு வருடத்திற்குமேல் இந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகின்றது இங்கு பணிபுரியும் மலையக மக்கள் பல சந்தர்ப்பங்களில் சென்னை நகருக்கு தங்கள் மனைவி மற்றும் குழந்தைகள் சகிதம் வந்து தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி இயக்குனர், மறுவாழ்வு இயக்குனர், மறுவாழ்வுதுறை அமைச்சர் ஆகியோரை நேரில் பார்த்தும் இதுவரை பலன் கிட்டவில்லை. இதேபோல் தாயகம் திரும்பியோர் வங்கித் திட்டத்தின் கீழ் கடன் பெற்று மலையக மக்களை நடுத்தெருவில் விட்டு விட்ட தொழிற்சாலைகள்ாக,

1. இராணிப்பேட்டை சால் வேக்ஸ் நிறுவனம்
2. தர்மபுரி சயிட் யுராணி கார்ப்பரேஷன்
3. திருநெல்வேலி பாபா மெரின்ஸ்,

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை ஒவ்வொன்றும் நாடு கடத்தப்பட்ட மலையக மக்களை கசக்கிப் பிழிவதிலும் ஊழலில் முதன்மை வகிப்பதிலும் போட்டி, போடுகின்றன,

## கோதாவரி இறப்பர்

சுமார் 50க்கு மேற்பட்ட தனியார் நிறுவனங்களில் நாடு கடத்தப்பட்ட மலையக மக்களுக்கு வேலைதருவதற்காக மேற்கொண்ட தொழிற்சாலைக்கு தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி கடனளித்துள்ளது. இந்த தொழிற்சாலையின் உரிமையாளர்கள் அரசியல்வாதிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி கடனைப் பெற்று வருகின்றார்களே தவிர நாடு கடத்தப்பட்ட மலையக மக்களின் நலனைப் பாதுகாக்க ஒரு போதும் கனவிலும் எண்ணியதில்லை. இதனால் இந்திய நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு மாநிலங்களில் உள்ள தனியார் தொழிற்சாலையில் கதவடைக்கப்படுவதால் இவர்கள் செய்வதறியாது தமிழ் நாட்டில் உள்ள நீலகிரியில் தனியார் தேயிலைத் தோட்டங்களில் வேலைதேடி அலைகின்றார்கள். இந்நிலைமை மேலும் நீடிக்காமல் இருக்க அரசாங்கம் தலையிட்டு நாடு கடத்தப்பட்டோருக்கு அரசாங்கமே நல்ல திட்டங்களை தீட்டுமா என்பது கேள்விகுறிதான்!...

பேட்டி கண்டவர்: செங்கோடன்.

---

ஆயுதப் போராட்டமானது மக்களை அணிதிரட்டும் வல்லமை பெற்றது. ஏனென்றால் அது மக்களை ஒரே பாதையில் ஒரே இலக்கில் இட்டுச் செல்லும் சக்தி வாய்ந்தது.

—காலனித் தனத்திற்கு எதிரான கருப்பர்களின் போராட்டம் பற்றி

**—Frantz Fanon**

---

படிப்பகம்

www.padippkam.com

# துடிக்கின்ற விழிகள்

அடுத்தவன் வீட்டுக் கொள்ளி
எங்களை எரிக்கும் போது
எங்கள் வீட்டுக் கொள்ளி
எப்படி அணையும்.

பட்ட மரங்களும்
தங்கள் கரங்களை
கோடாரிப் பிடிகளோடு
சேர்த்துக் கொண்டதால்
விடியலுக்கு இன்னும்
வெகு தூரம் இல்லை!

அட்டைகளோடு அவர்கள்
ஒட்டிக் கொண்ட பிறகு
அவர்கள்,
கொடுமைக் காரர்கள்!
நாங்கள்,
இலைகளைக் கிள்ளும்
எலும்பு இயந்திரங்கள்.

எங்கள் எலும்புகளை
நாங்கள்,
தெரிந்து கொண்டது
அவர்கள் சுரண்டி
அலுத்த பிறகு தான்.

பல இரவுகளில் — ஒரு
விடியலைத் தேடினோம் — இன்று
ஒரு விடியலுக்காக — பல
இரவு களைச் சுமக்கிறோம்.

எங்களை
உயரத்தில்
ஏற்றி வைத்து விட்டு
எங்கள்
உரிமைகளை மட்டும்
மண்ணுள் புதைத்து —
விட்டார்கள்.

அறிவை அப்போதே
அடகு வைத்து விட்டு
தேசாபிமானத்திற்காக
தேயிலை கிள்ளியதை
இப்போதுதான்—எங்களால்
உணர முடிகிறது!

சிறு துளி நீரிங்கே
வெள்ளமாய்ப் பெருகினால்
எதிர்த்து நிற்க
எதற்கிங்கே துணிவு வரும்
எரித்த நெருப்பையே
எரித்து அழிக்க
எழுந்து வருகிறோம்
எரிமலைக் குழம்பாய்

**—கருணாநிதி**

அன்பின் வாசகப் பெருமக்களே!

இது உங்கள் இதழ், இல்லையில்லை. நம்முடைய இதழ்.
படைப்புகளை நாங்களும் எழுதுகிறோம். நீங்களும் எழுதுங்கள்.

**மலையகப் போராட்ட முன்னோடிகள்** என்ற தலைப்பில் மறைந்த தலைவர் பற்றியும், வீர மரணம் அடைந்த மலையகப் போராளிகள் பற்றியும் சுருக்க வரலாறுகளை எழுதியனுப்புங்கள்.

மலையகப் பாடல்கள், சிறுகதைகள், முதியோர்களின் அனுபவங்கள் எல்லாவற்றையும் எழுதுங்கள். மலையகப் போராட்டப் படங்கள் அனுப்பினால் வெளியிட உதவியாய் இருக்கும்,

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**எரிமலை**
19, மூன்றாவது தெரு, சக்காரியா குடியிருப்பு
சூளைமேடு, சென்னை—600,094

—மலையக மாணவர் இளைஞர் முன்னணிக்காக வெளியிடுபவரும் ஆசிரியரும் **எம். எல். தாசன்**. அச்சகம்: **தேவநேயன் அச்சகம்**, சென்னை-600 005.

ERIMALAI 30—4—86 PRIVATE CIRCULATION ONLY—Rs. 1—00

"சிறிய செயல்களைச் செய்ய மறுக்காதீர்கள். ஏனெனில் அரும்பெரும் செயல்கள் எல்லாம் இச் சிறு செயல்களிலிருந்தே எழுப்பப்படுகின்றன' —தோழர் .லெனின்



"புரட்சிப் புயல் வீசுகிற காலத்தில் பிறந்தோம்! மக்களுக்கு மட்டுமே தலை வணங்கி பெருமித முள்ள லட்சியத்தை நோக்கி அடி மேல் அடி வைத்து புரட்சிப் புயலின் ஊடே செல்கிறோம்!" —ஜூலியஸ் பூசிக்

# மலையக மாணவர் இளைஞர் முன்னணி (USYF)

To

..........................................................................

..........................................................................

..........................................................................

ERIMALAI
19, III Street
Zackria Colony
Madras-600 094

www.padippkam.com

படிப்பகம்